ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

# இராஜகோபால மாலை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதரூஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதரூஸ் என். சி.

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

# இராஜகோபால மாலை.

விநாயகர் - காப்பு.

பொன்மணிமருவிபாயும் புவியுளோரெவருமேத்து
நன்மைசேர்தேவாபோங்கு ராஜகோபாலன்மீது
மன்னுபாமாலையோத மழைவிடைப்பெம்மான்றந்த
கன்னமாமதத்துநாதன் கழலிணைப்பணிகுவாமால்.

நூல்.

தண்டமா மலரின்தேனை
தனித்தனி வனத்தில்வாழும்
வண்டதை யறியுமல்லால்
மண்டூக மறிந்திடாது
கண்டது கடந்துபோகுங்
கசடர்க்கு நல்லார்பொல்லார்
இரண்டது தெரியாதையா
இராஜகோ பாலமாலே. (க)

பூத்திடு மலரின்வாசம்
புனல்வண்டே யறியுமல்லால்
எத்ததோர் கசடன்வண்டே
யீதுமண மறிந்திடாதே

தோத்திர மறியுமல்லால்
துர்க்குணம் படைத்தோர்செய்கை
நாய்த்தலை யீயோடொக்கு
இராஜகோ பாலமாலை. (௨)

பேய்க்கொமட் டிக்காய்க்குந்தான்
பேணியைங் காயமிட்டே
ஆக்கினு லுங்கசக்கு
மதுருசி குணமுண்டாயோ
போக்குநீக் கறியாமாந்தர்
புல்லருக் கறிவுசொன்னால
நாய்க்குணம் போகாதையா
இராஜகோ பாலமாலை. (௩)

முப்பாலு நாகத்தன்னை
முலையமு தூட்டிநன்றாய்
ஒப்புடன் வளர்த்திட்டாலு
மோங்கிய விஷம்போகாதே
அற்புதந் தன்னைநல்லோ
ரன்புவைத் தாலுமாந்தர்
நற்பதந் தெரியாதையா
இராஜகோ பாலமாலை. (௪)

வல்லசெங் தேனினோடே
வாகுடன் வேப்பஞ்சாற்றை
அல்லது கலந்திட்டாலு
மதனது கசப்பறுது

புல்லறி வாளர்க்கின்பப்
புத்தியைப் போதித்தாலு
நல்லவ ராகாதையா
இராஜகோ பாலமாலே. (ரு)
கடலதி னளவுநீளங்
காணவே யளவுகண்டு
அடவுடன் தொகைசொன்னாலு
மணிவரை நிரைகண்டாலு
மடபதி தனக்குவாய்த்த
மங்கையர் மனதில்வஞ்ச
நடவடி யறியொண்ணாதே
இராஜகோ பாலமாலே. (சு)
அம்புபோல் நீண்டலாலு
மரவத்தை நம்பினாலும்
கொம்பினாற் குலையதாக்குங்
குஞ்சரன் தனதென்றாலும்
வம்புசேர் மொழியாளந்த
மாதர்தன் சொல்லைத்தானே
நம்பினால் மோசமையா
இராஜகோ பாலமாலே (எ)
கூட்டினாற் குறைந்துபோகுங்
குறைந்தது நிறைந்துபோகும்
ஆட்டிடை விதியின்கூற்றை
அறிந்திடா திருககுமாந்தர்

நாட்டிகப் பேச்சேயல்லால்
தங்களைப் பழிப்பதெல்லாம்
ராட்டினச் சுற்றேரெடொக்கும்
இராஜகோ பாலமாலே. (அ)
கயந்தனிற் றுள்ளுமீன்கள்
கரைதனி லேவீழ்ந்தாலும்
உயர்ந்ததோர் மீன்களோட
முலுத்தர்கள் தம்மோடொக்கும்
பயந்ததோர் காரியங்கள்
பார்க்கும்போ தறிந்துசொல்லார்
நயந்துபின் னேரவேண்டும்
இராஜகோ பாலமாலே. (கூ)
எருக்கலர் கொழுத்துமீறி
யேகமாய்ப் பூத்திட்டாலு
மருக்கொழுந் ததற்குண்டான
வாசமு மணமுமுண்டோ
பிரத்தியர்க் குதவிசெய்யிற்
பேசுநற் கீர்த்தியாகு
நரர்க்கினி யறிவுவேண்டும்
இராஜகோ பாலமாலே (க0)
இன்பமில் லாதபேர்க
ளிடத்துசஞ் சாரமாகிற்
றென்முகங் குணமாமாந்தர்
திருமுகங் கண்டாற்போதும்

அன்புட னறிவில்லாத
 வரிவைய ரமுகிட்டாலு
நம்பவு மாகாதையா
 இராஜகோ பாலமாலே. (கக)
மேட்டினில் விரைத்தசெந்நெல்
 விளைந்தது கதிருவாங்கிச்
சூட்டின்மேற் போரேறுது
 துர்ச்சனர் சேதியெல்லாம்
வீட்டிமை யில்லாச்சும்மா
 வெறும்புலுக் காகுஞ்சேற்றில்
நாட்டிய கம்பமாகும்
 இராஜகோ பாலமாலே. (கஉ)
தெண்டனை யில்லாவேலை
 சிறுமார்தர் வாட்கைதானுங்
கொண்டவர்க் கடங்காப்பெண்டீர்
 கூர்மையில் லாதபிள்ளை
விண்டார்க ளிணக்கமெல்லாம்
 வாறுணை யில்லாசேர்க்கும்
நண்டது வளந்தநாழி
 இராஜகோ பாலமாலே. (கங)
மட்டியா யிருந்தானந்த
 வருத்தமில் லாரைவைத்துத்
தட்டியு மதட்டிச்சொல்லாத்
 தானது முழுதும்போச்சுக்

கெட்டிநற் புத்தியில்லாக்
கிரியைதான் நட்புஞ்சிந்தில்
வட்டியும் போலேசேரும்
இராஜகோ பாலமாலே. (கச)

பட்டது கிழிந்ததானாற்
பாணருக் காகும்வேந்தர்
கெட்டவர் மெலிந்தாராகிற்
கீர்த்தியும் புகழும்போமோ
தட்டது பட்டுக்குப்பை
தரணியிற் புதைத்திட்டாலும்
ரெட்டென வொளிபோகாது
இராஜகோ பாலமாலே (கரு)

உணவர்கள் ஜென்மங்கொண்டே
உறத்துடன் பருத்துமீறில்
மணமெனத் தெருவினின்று
பேசலாஞ் சுத்தவீரன்
குணமெனக் களரிக்கேற்ற
கூத்தாடிச் சிலம்பமெல்லாம்
ரணக்களந் தனக்கேறுதே
இராஜகோ பாலமாலே. (கசு)

வேதமில் லாதபார்ப்பான்
வித்தையில் லாதபிள்ளை
சாதமில் லாதபூசை
தந்தியில் லாதவீணை

நீதமில் லாதவூரு
　　நேரிழை யில்லாவீடு
நாதமில் லாதசெங்கன்
　　இராஜகோ பாலமாலே. (கஎ)
கூடியும் படையில்லாத
　　கொடும்பகை முடியும்போது
தேடியுஞ் சமரிலாண்மை
　　செய்தவ னொருவனுகுங்
கோடியிற் கோடிமீன்கள்
　　குதித்துவிண் ணுதித்திட்டாலு
நாடிய மதிக்கொப்பாமோ
　　இராஜகோ பாலமாலே. (கஅ)
நீடிய விதியில்லாமல்
　　நிறைந்துயிர் போகும்போதே
ஆடிய வாவிதூங்க
　　யயன்விதிக் கஞ்சிப்போக
ஓடிப்போய்ப் பிணம்போல்மாண்டா
　　லுயிரது போகும்போது
நாடிய விதிவிடாதே
　　இராஜகோ பாலமாலே. (கசு)
மேகத்தாற் சிந்தைநொந்து
　　மெய்சலித் திருந்தாலென்ன
மோகத்தின் படியல்லாம
　　லொன்றும்வே ருகாதையா

வாகத்தின் படிதானந்த
வாயுலட் சணமேசெய்யில்
நாகத்தின் கூறுங்கண்டீர்
இராஜகோ பாலமாலே. (௨0)
முன்னொரு வேடன்றானும்
முடுகவே வேங்கைக்கஞ்சி
உன்னியே மரத்திலேற
வுறுதியாய்க் குரங்குகாக்கத்
தின்னவே குரங்கையெய்துந்
தீவினைக் கொப்பாய்ச்செய்த
நன்மையே பாவங்கண்டீர்
இராஜகோ பாலமாலே. (௨௧)
கற்புள்ள மாதர்க்கன்பு
கணவனே யழகுமிக்க
விற்பனம் வினையமின்னாள்
வேசியர்க் கழகுமஞ்சள்
அற்பருக் கழகுபொய்தா
னரசர்க்குக் கேள்விநீதி
னற்புவிக் கழகுமாரி
இராஜகோ பாலமாலே. (௨௨)
தின்மையே புரிந்தவீரன்
திருதராட் சதன்குமாரன்
பொன்மயன் சிறந்தசெங்கோல்
புகழ்ந்துநீ பொய்யேபேசி

தன்மமே ஜெயமென்றெண்ணித்
 தரணியிற் றவமேசெய்தால்
நன்மைக்கோ ரழிவுமில்லை
 இராஜகோ பாலமாலே. (உ௩)

ஆட்டுக்கு ளழகுபந்த
 மரிவையர்க் கழகுகொங்கை
வீட்டுக்கு ளழகுதீபம்
 வீரத்துக் கழகுயானை
பாட்டுக்கு ளழகுசந்தம்
 பட்சிகட் கழகுகிள்ளை
நாட்டுக்கு ளழகுமாரி
 இராஜகோ பாலமாலே. (உ௪)

உற்பன மாகநல்ல
 உத்தமர் மொழியுங்கல்வி
அற்பருக் குரைசெய்தாலு
 மவரவர் குணமேகாட்டும்
வெற்புள நிலத்திற்சம்பா
 விரைதனைத் தெளித்திட்டாலும்
நற்பயிர் விளைவாகாதே
 இராஜகோ பாலமாலே. (உ௫)

சமையமா யிருக்கும்பாரி
 சாந்தமா யுடலுமொன்றுங்
கலையுட னிருக்கும்போது
 கணவனுக் குயிர்கண்ணாகும்

நிமைவிழி சிமிட்டுமுன்னே
நிறைந்துயிர் போகும்போது
நமனுட வாதுசெய்வோம்
இராஜகோ பாலமாலே. (உசு)
பொக்கிஷம் பொருள்பதார்த்தம்
பொற்பணி யானசொர்னங்
கக்கிஷ மீயார்கையில்
கணக்கவே யிருந்தாலென்ன
மிக்கவு நிலத்தேஞ்சிந்தி
வித்துட நரகில்வீழ்ந்தால்
நக்கவோ யெடுக்கவோதான்
இராஜகோ பாலமாலே. (உஎ)
தநெ[illegible]ன்ன நின்றுன்புத்தன்
சமணர்கள் மதத்தைத்தானே
மான்புலி தரித்தோன்மைந்தன்
வான்கழு வேற்றிவிட்டான்
வானமும் புவியைத்தாங்க
வல்லமை யிருந்தாலுந்தா
நானெனு மாண்மையாமோ
இராஜகோ பாலமாலே. (உஅ)
ஆச்சுதே பொருள்நமக்கு
வாமென தேடிவைத்தால்
தேச்சுது விடுநாள்வந்தால்
சிந்திடாக் காப்பதுண்டோ

நீச்செழுங் கடலுக்குள்ளே
நிலைமைதா னிலங்கையென்ற
ராட்சதன் வாழ்வுமெங்கே
இராஜகோ பாலமாலே. (உகூ)
பொக்கிஷம் பொருளுந்தேடி
புதைத்துப்பின் றுணுண்ணமல்
யெக்கிய வுடல்களோடே
யிறந்துண்ணு மாந்தர்வாழ்க்கை
திக்கெங்கு மாரிபெய்து
தெருவெல்லாம் பெருகியோட
நக்கிய குக்கலொக்கும்
இராஜகோ பாலமாலே. (௩0)
வாயது மட்டுமிஞ்சி
வாகுடன் பெரியோர்தம்மை
நேயமா யிகழ்ச்சிபேச
நெறியுட னறிவுமில்லை
காய்கிற வெயிலைப்பார்த்துக்
காரியே துப்பிக்கொள்ள
நாயது குலத்தோடொக்கும்
இராஜகோ பாலமாலே. (௩க)
துர்க்குணம் படைத்தவீரர்
துரைத்தனஞ் செய்தாலென்ன
தெற்கிசை யழித்திட்டாலுஞ்
செவினுடக் காகாச்சங்கு

மிக்கவே யறிவுநீதம்
  விசாரணை யில்லாக்கேள்வி
நற்கணை விசையோடொக்கும்
  இராஜகோ பாலமாலே (௫௨)
வாயினில் வந்தசொல்லை
  மதலைச்சொல் லாமென்றெண்ணி
மாயவன் பேரைக்கொண்டு
  மனதினில் தியங்கவேண்டாந்
தாயிலாப் பிள்ளைதன்னை
  தடவியே தான்வளர்த்தால்
நாயகி நாதன்கேட்பான்
  இராஜகோ பாலமாலே. (௫௩)
குருவையு மிகழ்ந்தசிஷன்
  கொம்பனை யளித்தமாது
பரியதோர் பெண்களெல்லாம்
  பட்சமா யிருக்கும்போது
கிரியதோ ராஜரெல்லாங்
  கேள்வியில் லாதவேந்தர்
நரிதுரைத் தனத்தோடொக்கும்
  இராஜகோ பாலமாலே. (௫௪)
கற்றவர் தங்கள்முன்னே
  கல்வியில் லாதமூடர்
எத்தனை படித்திட்டாலு
  மெதிர்த்துரை மொழியமாட்டார்

சத்தமிட் டகட்டநின்று
தாய்புலி முன்னேகாவில்
ரத்தினஞ் செழிக்குமோதான்
இராஜகோ பாலமாலே. (௩௫)

மேருவைச் சார்ந்தகாகம்
விரைந்துபொன் னிறமாய்க்காணுஞ்
சார்தனி லிருந்தபேர்க்கு
தாழ்வுவோர் நாளுமில்லே
பார்தனில் மலர்கள்சூட்ட
பரிவுடன் கிழித்தவாளே
நார்தனேத் தள்ளப்போமோ
இராஜகோ பாலமாலே. (௩௬)

இடந்தனி லிருந்தபேர்க்கு மிடுக்கமே செய்துவந் தால், அடந்தனி லிடுக்கஞ்செய்தா லதுபழி வீண்போ காது, தொடர்ந்துபின் வருமென்றெண்ணி தூக்கியே யடிவைத்தாலும், நடந்தகா லிரண்டுமையா இராஜகோ பாலமாலே. (௩௭)

இன்மைக்கு வாழ்வுந்தாழ்வு மிருக்குமென் றெண் ணவேண்டும், கன்மிக்கு யுண்ணியஞ்சேர் கலந்துதான் பிருக்குமென்றேன், தின்மைக்குச் சேவித்தமேளந் திரு ம்பியும் வாசல்வந்து, நன்மைக்குஞ் சேவிக்குமையா இராஜகோ பாலமாலே. (௩௮)

ஆக்ஷியாய் கற்றகல்வி யானதோர் சபையில் வந்து, கோட்சியாய்ப் பேசவேண்டாங் கோழிக்குக் கட்டுங் கெச்சை, காட்சியாய்க் கருடன்காலில் கட்டிய கெச்சைதானும், ராச்சிய மெல்லாங் காண்பார் இராஜகோபாலமாலே. (௫௯)

பூணுமோ பணிகள் தோண பொற்குட மொருபால்கட்டி, வேணதோ ரகிலம்விட்டு வெளியினில் வந்த மாதர், சாணியுங் கூடயொக்கும் சவாதினுத் திரிவோன் பின்னு, நாணந்தான் அவர்கட்கேது இராஜகோ பால மாலே. (௬0)

காரிரு குழைகள்கோதி கயல்விழி மருட்டிக் கொஞ்சி, வீரிய மிகவும்பேசி யேசவுங் கணவன்றன்னே, தீருமை பாகச்செய்யான் தினந்தினம் பூசைசெய்யும், நாரியர்க்கேதுபத்தம் இராஜகோ பாலமாலே. (௬௧)

புலனெடு நூல்களாய்ந்து புகலுவார் புல்லோராய்ந்து, புலனெடு விருந்தமூடர் பேசினு லாவதென்ன, நிலமது சித்திரங்கள் நிலைபெற வெழுதி வைத்தால், நலமுட னறியுமோசொல் இராஜகோ பாலமாலே. (௬௨)

தம்பியே யென்பாள் பின்னும் தலைமயிர் தனைவிரித்து, வெம்புவாள் விழுவாள் மிஞ்சி விதவிதஞ் செய்வாள்

கோபி, வம்புகள் செய்வாள்நல்ல மன்னனென் றுறுதிச் சொல்வாள், நம்புவார்க் கேதுசுத்தம் இராஜகோ பால மாலே. (சரு)

மயம்பெற பணிகள் பூண்டால் மாமுகத் தழகே யாகும், ஜெயம்பணிக் கேதுமுண்டோ சித்திரம் சுவரில் வைத்து, தயவுடன் பார்த்தபேர்க்கு தானது வலக்க மல்லால், நயமது தெரியுமோசொல் இராஜகோ பால மாலே. (சச)

சொல்லினுக் கடங்காமாதர் துலங்குவார் குணத்தி னலே, அல்லது மில்லாமாதர் அவர்நிலை யுலகில்போ மோ, பல்லது காட்டினாலும் பகைத்துச்சந் திரனைப்பார்க்கும், அல்லது மறியுமோசொல் ராஜகோ பாலமாலே.

அச்சுதன் முடியுமீதி லானபூ மாலையாகத், தச்சதோர் நருக்கொப்பாய் தமிழையா னுரைத்த சொல்லை, கொச்சமே சொல்லவேண்டாங் கூறிய புலவோர் பார்த்து, ரட்சகனருளவேண்டும் இராஜகோ பாலமாலே. ()

## இராஜகோபாலமாலை,

முற்றிற்று.